# மத்திய தொலை தொடர்பு அமைச்சர் 10-10-2011 அன்று வெளியிட்ட தேசிய தொலை தொடர்பு கொள்கையின் நகலறிக்கையின் மீது BSNL ஊழியர் சங்கத்தின் விமர்சனங்களும், மாற்று தொலை தொடர்பு கொள்கைக்கான நமது முன் மொழிவும்.

(10-10-2011 அன்று மத்திய தொலை தொடர்பு மற்றும் தகவல் தொழில் நுட்ப அமைச்சர் திரு கபில் சிபல் தேசிய தொலை தொடர்பு கொள்கை 2011-ன் நகல் அறிக்கையை வெளியிட்டார். இது தொடர்பாக தனி நபர் மற்றும் நிறுவனங்கள் தங்களது கருத்துக்களை வழங்குமாறு தொலை தொடர்பு இலாகா அதன் இணைய தளத்தில் தெரிவித்துள்ளது. தேசிய தகவல் தொலை தொடர்பு கொள்கையின் நகல் அறிக்கைக்கான தனது கருத்துக்களை BSNL ஊழியர் சங்கம் 09.11.2011 அன்று தொலை தொடர்பு இலாகாவிற்கு தெரிவித்துள்ளது. தொலை தொடர்பு துறையில் பொதுத்துறை நிறுவனங்களை அழிக்கவும், தனியார் நிறுவனங்களின் மேலாதிக்கத்தை வளர்க்கும் நோக்கத்தோடு தான் தேசிய தொலை தொடர்பு கொள்கையின் நகல் அறிக்கை உள்ளது என BSNL ஊழியர் சங்கம் கருதுகிறது. இந்த அடிப்படையில் அரசின் கொள்கையில் இருந்து BSNL ஊழியர் சங்கம் மாறுபடுகிறது. தொலை தொடர்பு சேவை பொது மக்கள் நலனுக்காகவே இருக்க வேண்டும். எனவே அது தனியார் நிறுவனங்களில் லாப வேட்டைக்கு அடிபணிந்து போகக் கூடாது. லாப நஷ்ட கணக்கு பார்க்கப்படாமல், பாதுகாப்பான நவீன தொலை தொடர்பு சேவைகள் நாட்டின் அனைத்து பகுதிகளிலும் உள்ள சகல பகுதி மக்களுக்கும் கிடைக்கும் வகையில் சேவை தரக்கூடிய பொதுத்துறை நிறுவனங்களின் மேலாதிக்கத்துடன் இருக்க வேண்டும். எனவே BSNL ஊழியர் சங்கம் தேசிய தகவல் தொலை தொடர்பு நகல் அறிக்கை மீது விமர்சன பூர்வமாக கருத்துக்களையும், மாற்று திட்டத்தினையும் முன் வைத்து தொலை தொடர்பு இலாக்காவிற்கு தெரிவித்துள்ளது.)

1)தொலை தொடர்பு துறை எந்த விதமான திசைவழியில் செல்ல வேண்டும் என்ற குறைந்தபட்ச பார்வை கூட இல்லாமல் மத்திய தொலை தொடர்பு மற்றும் தகவல் தொழில் நுட்ப அமைச்சர் தேசிய தொலை தொடர்பு கொள்கை 2011 வெளியிட்டுள்ளார். 1994 மற்றும் 1999 -ல் வெளியிடப்பட்ட தேசிய தொலை தொடர்பு கொள்கை அதன் இலக்குகளை அடைந்ததா இல்லையா என்ற பரிசீலனை கூட செய்யப்படவில்லை.

2)தொலை தொடர்பு துறையில் உள்ள நிர்வாக சீர்கேட்டின் காரணமாக ஏற்பட்டுள்ள இக்கட்டிலிருந்து தனியார் நிறுவனங்களை மீட்பதற்காகவே தேசிய தொலை தொடர்பு கொள்கை 2011 உருவாக்கப்பட்டுள்ளது போல தோன்றுகிறது. NDA மற்றும் UPA அரசாங்கத்தின் காலத்தில் உருவாகிய தொலை தொடர்பு ஊழலுக்கு காரணமான கூட்டு சதிகளை கவனிப்பதற்கு பதிலாக பொதுத் துறை நிறுவனமான BSNL மற்றும் MTNL-ன் செலவில் தனியார் கம்பெனிகளை காப்பாற்ற தேசிய தொலை தொடர்பு கொள்கை 2011 முயற்சிக்கிறது.

3)தொலை தொடர்பு துறையின் மீதான எந்த ஒரு கொள்கை முன்மொழிவும் கீழ்கண்ட விஷயங்களை அடிப்படையாக கொண்டதாக இருக்க வேண்டும்:

a)பொருளாதாரத்தின் அடிப்படை சட்டங்களின் ஒரு பகுதியாக தொலை தொடர்பு துறை இருக்க வேண்டும். எனவே அது நகர்புறம் மற்றும் கிராமப்புரங்களை உள்ளடக்கி சமூகத்தில் உள்ள தொழில், வர்த்தக நிறுவனங்கள் மற்றும் உள்ள சந்தாதாரர்கள் அனைவருக்கும் குறைவான கட்டணத்தில் தொலைத் தொடர்பு சேவை தரப்படல் வேண்டும்.

b)ஸ்பெக்ட்ரம் ஒரு அபூர்வ வளமாக இருப்பதால் அது திறமையாகவும், முறையாகவும் பயன்படுத்தப்படவேண்டும்.
c)அகலக்கற்றை இணையதள இணைப்புகளை தர ஏதுவாக அடிப்படை சேவைகள் அல்லது தரைவழி இணைப்புகளுக்கோ முக்கியத்துவம் தரப்பட வேண்டும்.
d)அனைவருக்கும், குறிப்பாக கிராமப்புற அடிமட்ட சந்தாதாரர்கள் அனைவரும் ஏற்கத்தக்க செல் மற்றும் இணையதள சேவைகளை பொதுத் துறை நிறுவனங்கள் மட்டுமே உறுதி செய்ய முடியும்.

4)ஆனால் இந்த கொள்கை பொதுத்துறை நிறுவனங்களை சீரழிக்கும் நோக்கத்துடன், தொலை தொடர்பு சேவைகளை முன்னேற்றுவதற்கான அடிப்படையான வாகனம் தனியார் நிறுவனங்கள்தான் என்று சொல்கிறது. கொள்கை நகல் அறிக்கையின் இந்த அடிப்படை தவறானது. ஏனெனில் தொலை தொடர்பு என்பது பொது மக்கள் நலனுக்காகவே. இதனை தனியாரின் லாபவெறிக்கு அடிபணியச் செய்யக்கூடாது. 1991-ல் தாராளமயக் கொள்கைகள் தளர்த்தப்பட்ட பின், தொலை தொடர்பு துறையில் தனியார் நிறுவனங்களின் அனுபவம் கீழே தரப்பட்டுள்ளது.

a)உரிமங்கள் வழங்கும் போது குறிப்பிடப்பட்ட நஷ்டம் தரும் பகுதிகளிலும் சேவை தர வேண்டும் என்ற சமூக கடமையை தனியார் நிறுவனங்கள் பின்பற்ற வில்லை. இயற்கை பேரழிவுகளுக்கு பின் மற்றும் இக்கட்டான சூழ்நிலைகளில் தொலை தொடர்பு சேவைகளை கொடுக்க முன்வரவில்லை.
b) அவை வெளி நாட்டு தயாரிப்பாளர்களிடமிருந்து கருவிகளை வாங்கினார்கள். எனவே உள்நாட்டு ஆராய்ச்சி மற்றும் மேம்பாடுகளும் (R&D) உள்நாட்டு தொலை தொடர்பு உற்பத்தியும் முழுமையாக அழிக்கப்பட்டது. எனவே இறக்குமதி செய்யப்பட்ட கருவிகளையே முழுமையாக நம்பி இருக்கவேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது.
c)அவர்களது சேவைகள் மற்றும் வலைபின்னல்களை, நிர்மானம், பராமரிப்பு மற்றும் செயல்படுத்துதலை கருவிகள் உற்பத்தி செய்யும் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டதால் தேசத்தின் பாதுகாப்பிற்கு மிகப்பெரிய அச்சுறுத்தலை உருவாக்கி உள்ளனர்.
d)தனியார் நிறுவனங்கள் SC/ST/OBC க்களுக்கான இட இதுக்கீட்டை அமுல்படுத்தாமல் சமூக நீதி பாதிப்பிற்கு உள்ளாக்கப்பட்டுள்ளது.
e)ஒப்பந்த ஊழியர்களும், வெளிப்புறச் சேவைகளுமே அந்த வெளிநாட்டு நிறுவனங்களின் உழைப்பாளர்கள். எனவே தொலை தொடர்பு சேவை மிக அதிகமாக வளர்ந்திட்ட போதும், வேலை வாய்ப்பு அதிகரிக்கவில்லை. ஒரு அறிக்கையின் படி, 2007-ம் ஆண்டில் இந்திய தனியார் தொலை தொடர்பு நிறுவனங்கள் 134.47 மில்லியன் சந்தாதாரர்களை பெற்ற போதும் 63736 ஊழியர்களை மட்டுமே கொண்டிருந்தன. ஆனால் பொதுத் துறை நிறுவனங்களான BSNL மற்றும் MTNL ஆகியவை 71.39 மில்லியன் சந்தாதாரர்களை பெற்றிருந்த போதிலும் 3,69,035 ஊழியர்களை பெற்றுள்ளனர். மிக அதிகமாக சேவை விஸ்தரிக்கப்பட்டாலும், தனியார் நிறுவனங்கள் நேரடியான, நிரந்தர வேலை வாய்ப்பை அதிகரிக்கவே இல்லை என்பதே இந்த புள்ளி விவரங்கள் கூறும் உண்மை. 1980 களில் தொலை தொடர்பு துறையில் 6 லட்சம் ஊழியர்கள் இருந்த நிலை என்பது 2007-ல் அனைத்து தொலை தொடர்பு நிறுவனங்களிலும் சேர்த்து 432771 பேருக்கே வேலை வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு தொலை தொடர்பு துறையில் தனியார் நிறுவனங்களின் ஆதிக்கம் என்பது வேலை வாய்ப்பை சுருக்கி உள்ளது.

f)அவர்கள் தொடர்ச்சியாக உரிமத்தின் விதிகளை மீறினர். மேலும் இந்த விதி மீறல்களை அனுமதிக்கும் படியான புதிய கொள்கைகளை உருவாக்கும் வகையில் அரசாங்கம் அவர்களிடம் ரகசிய உடன்பாடு செய்து கொண்டது.
g)மிக மோசமான 2-G ஸ்பெட்ரம் ஊழலின் அடிப்படைக் காரணமே அவர்கள் தான்.

h)பொதுத் துறை நிறுவனங்களின் நுழைவுக்கு பின்னரே மொபைல் சேவையின் கட்டணங்களை அவர்கள் குறைத்தனர். அதற்கு பின் எப்போதெல்லாம் முடிகிறதோ அப்போதெல்லாம் கூட்டணி அமைத்துக்கொண்டு கட்டணங்களை உயர்த்துகின்றனர்.

5.ஆனால் மறுபுறம் பொதுத் துறை நிறுவனங்களான BSNL மற்றும் MTNL நிறுவனங்கள் நஷ்டம் ஏற்பட்ட போதும் தங்களது சமூக கடமைகளை முழுமையாக நிறைவேற்றி வருகின்றன. இயற்கை பேரழிவு ஏற்படும் போதும், அவசர தேவை ஏற்படும் போதும் துரிதமாக தொலை தொடர்பு சேவைகளை சீரமைத்துள்ளன. ITI உள்ளிட்ட நிறுவனங்களிடம் கருவிகளை வாங்குவதன் மூலம் உள்நாட்டு உற்பத்தியை ஊக்கப்படுத்துகின்றன. அதிகமான பிராட் பேண்டு சேவைகளை கொடுத்துள்ளன. தங்களது இணைப்புகளை தாங்களே பராமரித்து இயக்குவதன் மூலம் தேசத்தின் பாதுகாப்பினை உறுதி செய்கிறது. கிராமப்புற, பின்தங்கிய, மலை பகுதிகளிலும் தங்களது சேவைகளை கொடுத்து வருகிறது. தனியார் நிறுவனங்களை ஒப்பிடும் போது சமூக நீதியுடன் கூடிய அதிக வேலைவாய்ப்பை தருகின்றன. நஷ்டத்தை சந்தித்த போதும் பாரம்பரிய தரைவழி தொலை தொடர்பு சேவைகளை தேசத்தின் சொத்தாக பராமரித்து வருகின்றன. ஆனால் அரசாங்கமோ பொதுத்துறைகளின் குரல்வளையை நெறித்து, அதன் மூலம் தனியார் நிறுவனங்களுக்கு உதவி செய்யும் கொள்கைகளை கடைபிடித்து வருகின்றது.

6. 2008ம் ஆண்டு BSNL-ந் சந்தை மதிப்பு என்பது 100 மில்லியன் டாலர்கள் என மதிப்பீடு செய்யப்பட்டது. அது உண்மையான மதிப்பை விட மிக மிக குறைவானது. ஆனால் தற்போது அரசின் தவறான கொள்கைகளாலும், பாரபட்சத்தாலும் அது வேகமாக நலிவடைந்து வருகிறது. ஒரு மதிப்பு மிக்க சொத்தை இந்திய மக்கள் இழந்து வருகின்றனர். இதற்கு மாறாக சீனாவில், அந்த அரசாங்கம் அங்குள்ள அரசுத்துறை தொலை தொடர்பு நிறுவனங்களுக்கு ஆதரவு அளித்துவருகிறது. சீனா யூனிகாம், சீனா டெலிகாம் மற்றும் சீனா மொபைல் ஆகிய சீன அரசுக்கு சொந்தமான மொபைல் தொலைபேசி நிறுவனங்களாகும். அதன் 70% பங்குகள் பட்டியலிடப்படாத பல சிறு சிறு நிறுவனங்களுக்கும், நிதி அமைச்சகத்துக்கும் சொந்தமானது. அதில் சீனா மொபைல் என்பது அந்நாட்டின் மிகப்பெரிய மதிப்பு மிக்க நிறுவனம். அது Fortune-500 என்று சொல்லப்படும் பட்டியலில் இடம் பெற்றுள்ளது. சீனாவில் உள்ள மிகப்பெரிய அரசுக்கு சொந்தமான தொலைதொடர்பு நிறுவனங்களின் சந்தை மதிப்பு என்பது 250 முதல் 300 பில்லியன் டாலர்களாகும். எனவே தான் BSNL மற்றும் MTNLக்கு பாரபட்சம் காட்டப்படும் அரசின் கொள்கைகளை கைவிட்டுவிட்டு இந்திய தொலை தொடர்பு வளர்ச்சிக்கு இந்த நிறுவனங்கள் முக்கிய பங்காற்றிட செய்வது என்பது முக்கியம்.

7.வலைபின்னல்களையும் சேவைகளையும் தனித்தனியாக பிரிக்க வேண்டும் என்பது தேசிய தொலை தொடர்பு கொள்கை 2011ன் நகல் அறிக்கையின் முக்கியமான நோக்கங்களில் ஒன்று. இது இரண்டு விதமான உரிமங்கள் தொடரும் முறையை முன் வைக்கிறது. ஒன்று வலைபின்னல்களுக்கான உரிமங்களை

பெற்று செயல்படும் வலைபின்னல்களை வைத்துக் கொண்டும், மற்ற சேவைக்கும் உரிமங்களை பெறுபவர்கள் மற்றவர்களின் இணைப்பை பயன் படுத்தி சேவைகளை தருவார்கள். தற்போது தொலை தொடர்பு துறையில் ஏற்பட்டு வரும் வளர்ச்சிக்கு மாறான அனுகுமுறையாக நாம் இதை பார்க்க வேண்டும். இது பிரச்சனைகளை தீர்ப்பதற்கு பதிலாக மேலும் பல பிரச்சனைகளை உண்டு பண்ணும். இந்த முன் மொழிவு கீழ்கண்ட விஷயங்களில் இருந்து உருவாகி உள்ளது.

a)ஒரு சில பகுதிகள் மட்டும் உரிமங்களை பெற்றுக்கொண்டு உரிமம் பெறாத பகுதிகளில் சேவை தர விரும்பும் நிறுவனங்களின் தேவை. இதற்கு உதாரணம் தற்போது 3-G சேவையில் ஒரு சில நிறுவனங்களால் செய்யப்பட்ட விதி மீறல்கள்.
b)தங்களுக்கு தேவையான வலைபின்னல்களை உருவாக்க முடியாமல் பல நிறுவனங்கள் 2-G உரிமங்களை பெற்றுள்ளனர். அவர்கள் BSNLன் வலைபின்னல்கள் உள்ளிட்ட மற்றவர்களின் மீது குதிரை சவாரி செய்ய வேண்டிய தேவை உள்ளது.
c)மற்ற தனியார் நிறுவனங்களின் வலைபின்னலை விட பல மடங்கு அதிகமாக நிலத்தில் புதைக்கப்பட்டுள்ள BSNLன் காப்பர் கேபிள் வலை பின்னல்களை தனியார் கம்பெனிகள் பயன் படுத்த வேண்டும்.
d)தனக்கென எந்த விதமான வலை பின்னலையும் ஏற்படுத்திக்கொள்ளாமல் BSNL-ன் துடிப்பன வலைபின்னலை தனியார் நிறுவனங்கள் பயன் படுத்த வேண்டும்.

8."Intra Circle Roaming" என்ற முறையை அறிவித்து அதன் மூலம் தனியார் நிறுவனங்களுக்கு, BSNL மற்றும் MTNL நிறுவனங்களது வலை பின்னலை கொடுக்க கட்டாயப்படுத்திய முன்னாள் அமைச்சர் ஆ.ராசா, தனியார் நிறுவனங்களின் மற்றவர் முதுகில் சவாரி செய்யும் முறையை ஆரம்பித்தார். தனியார் நிறுவனங்கள் தங்களுக்கு சொந்தமான வலை பின்னலையும் உருவாக்கிக் கொள்ள மாட்டார்கள். அவர்களுக்கு விதிக்கப்பட்ட நிபந்தனைகளையும் நிறைவேற்றமாட்டார்கள். ஆனாலும் அவர்கள் சந்தாதாரர்களை ஈட்டியுள்ளனர் என காட்டிக்கொள்ள சந்தைகளில் கவர்ச்சி கரமாக விளம்பரப்படுத்திக் கொள்வார்கள். "Intra Circle Roaming" உரிம விதிகளில் பலவற்றை மீறியுள்ளதாலும், அது பல கடுமையான பாதுகாப்பு சிக்கல்களையும் உருவாக்கும் என்று TRAI நிறுவனம் தனது ஆட்சேபனையை தெரிவித்து உள்ளது. ஆ.ராசா சட்ட விரோதமாக செய்த விஷயத்தை தற்போதைய தேசிய தொலை தொடர்பு கொள்கை சட்ட பூர்வமாக மாற்ற முயற்சி செய்வதை போல தெரிகிறது.

9.வலைபின்னல் உருவாக்குவது மற்றும் சேவைகளை தருவது ஆகியவற்றை தனித்தனியாக பிரிக்கும் முறை பல தொழில் நுட்ப, சட்ட பூர்வ மற்றும் வர்தக ரீதியான பிரச்சனைகளை உருவாக்கும். இது போன்ற கொள்கையை முன்வைப்பதற்கு முன்னர் தொலை தொடர்பு இலாக்க அதனை சரியாக ஆய்வு செய்யவில்லை, ஏற்கனவே கொடுக்கப்பட்ட் உரிமங்கள் மீது இது எத்தகைய தாக்கங்களை உருவாக்கும் எனவும் ஆய்வு செய்யவில்லை. இதில் உள்ள சில முக்கிய பிரச்சனைகள் பின் வருமாறு.

a)வலைபின்னலை உருவாக்கும் நிறுவனமும், சேவை தரும் நிறுவனமும் கட்டாயம் பிரிக்கப்படுமா? இரண்டு சேவைகளுக்குமான உரிமங்களை ஒரே நிறுவனம் வைத்துக் கொள்ள முடியாது என்று பொருள்தருமா?

b)அப்படியானால் இணைப்பிற்கான தேவை என்ன?
c)தொலை தொடர்பு துறை ஏகப்பட்ட கூறுகளாக பிரிக்கப்பட்டுள்ளது என இந்த கொள்கை கூறும் போது, இந்த முறை என்பது ஏற்கனவே உள்ள தொலை தொடர்பு சந்தையை மேலும் அதிக கூறுகளாக மாற்றுவது ஆகாதா?

10.இது போன்ற எந்த விதமான ஆய்வும் மேற்கொள்ளப்படாமலேயே இந்த கொள்கை வெளியிடப்பட்டது என்பது BSNL ஐ குறிவைத்து, அதன் வலைப்பின்னலை மற்றவர்களுக்கு பிரித்து கொடுக்கும் நோக்கம் மட்டுமே உள்ளது என தெரிகிறது. இல்லையென்று சொன்னால் மற்றவர்கள் அதனுடன் இணைத்து கொள்ளும் வகையிலான ஒரே பொதுவான வலைபின்னலை பற்றி பேசியிருக்கலாம். துரதிருஷ்டவசமாக உள்ளூர், தொலை தூர மற்றும் பன்னாட்டு சேவைக்கு பல நிறுவனங்கள் வரும் போது இந்த வழி என்பது பின்பற்றப்படவில்லை. தற்போதுள்ள முறை மாற்றப்படவேண்டுமெனில், அப்படி முடிவு எடுப்பதற்கு முன் மேலும் பல ஆய்வுகள் செய்திருக்கவேண்டும். இவ்வாறு Adhoc முறையிலோ துண்டு துண்டாகவோ செய்ய முடியாது.

11.தேசிய தொலை தொடர்பு 1991 மற்றும் 1999 கொள்கைகளில் சுய சார்பு ஒரு பகுதியாக இருந்தாலும் கடந்த 20 ஆண்டுகளில் இந்திய தயாரிப்புகள் என்பது முற்றிலும் அழிக்கப்பட்டுவிட்டது. 40000 இணைப்பும் அதற்கு மேற்பட்ட உயர்மட்ட தொலைபேசி நிலையங்களை உருவாக்கும் ITI, C-DOT தொழில் நுட்பத்தை பயன் படுத்தி சிறிய தொலைபேசி நிலையங்களை உருவாக்கும். பல தயாரிப்பு நிறுவனங்களும் கொண்ட உறுதியான தயாரிப்பு நிறுவனங்களை இந்திய நாடு தன்னகத்தே கொண்டிருந்தது. பெரிய ஆய்வு மற்றும் மேம்பாடு (R&D) திறமையும், இந்திய தன்மைக்கேற்ற, பன்னாட்டு நிறுவனங்களுக்கு இணையான தொழில் நுட்ப வசதிகளை கொண்ட தொலை பேசி நிலையங்களை உருவாக்கியது C-DOT. ஒரு கட்டத்தில் கிராமப்புற மற்றும் மற்றா தொலைபேசி நிலையங்களுக்கான பெரும் பகுதி தேவையை C-DOT தொழில் நுட்பம் நிறைவேற்றியது.

12.தற்போது BSNLலும், முன்னர் தொலை தொடர்பு இலாக்கவும் ஒரு அங்கமாக விளங்கிய தொலை தொடர்பு தொழிற்சாலைகள் (Telecom Factory), ITI மற்றும் HTL போன்ற உற்பத்தி துறையில் இருந்த பொதுத்துறை நிறுவனங்களும், C-DOT-ம் கடந்த இருபது ஆண்டுகளில் அழிக்கப்பட்டது. தொலை தொடர்பு துறையின் (R&D) மற்றும் உள்நாட்டு தயாரிப்புகளுக்கு ஏற்பட்ட நிலைமை என்பது தொலை தொடர்பு பகுதியில் புதிய தாராளாமயமாக்கல் கொள்கைகள் திவாலானதையே காட்டுகிறது. 1997ல் இந்திய நாடு 1.75 கோடி தொலை பேசி இணைப்புகளை கொண்டிருந்தது. (1.7 கோடி தரைவழி தொலை பேசிகள், 5 லட்சம் கம்பியில்லா தொலைபேசிகள்). 31.03.2011ல் அது 85 கோடியாக உயர்ந்துள்ளது. (3 கோடி தரைவழி தொலை பேசிகள் 82 கோடி கம்பியில்லா தொலை பேசிகள்). 1995-ல் இணையதள சேவைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. 31.03.2011-ல் 1.2 கோடி பிராட்பேண்ட் இணைப்புகள் உள்ளன. சேவையில் இது போன்ற அபரிவிதமான வளர்ச்சி இருந்த போதும், தொலை தொடர்பு துறையில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு மற்றும் உற்பத்தி துறையில் இந்தியா தனது சுய சார்பை இழந்துவிட்டது. 2004-05 முதல் 2008-09 வரையிலான காலத்தில் இந்திய நாட்டில் தொலை தொடர்பு வளர்ச்சிக்கு 3,09,369 கோடி ரூபாய் மதிப்புள்ள கருவிகள் பயன்படுத்தப்பட்டன. அதில் 11 சதவீதம் மட்டுமே, அதாவது 34,031 கோடி ரூபாய் மதிப்புள்ள கருவிகள் மட்டுமே இந்தியாவில் தயாரிக்கப்பட்டவை. மீதமுள்ள 2,75,338 கோடி ரூபாய்கள் வெளிநாட்டு தயாரிப்பாளர்களுக்கு போய்

சேர்ந்தது. இதில் Completely Kncok Down (CKD) கருவிகள் 1,24,280 கோடி ரூபாய்க்கும் Semi Kncoked Down (SKD) கருவிகள் ரூ 1,50,518 கோடு ரூபாய்க்கும் இறக்குமதி செய்யப்பட்டன. முதன் முறையாக கருவிகள் தயாரிக்கும் பொதுத்துறை நிறுவனமான ITI நலிவடைந்த நிறுவனமாக மாறியது. C-DOT இயக்கத்தில் இல்லாமலேயே போய்விட்டது.

13.உள்நாட்டு பொருட்களை வாங்குவதற்கு முன்னுரிமை வழங்கப்படும் என வரைவு கொள்கை தெரிவிக்கிறது. ஆனால் உடனடியாக அது மற்றொரு நிபந்தனையை விதிக்கிறது. அது WTO ல் உள்ள சர்வதேச வரைமுறைகளுக்கு உட்பட்டு இருத்தல் மட்டுமே அந்த முன்னுரிமை தரப்படும் என்கிறது. முன்னுரிமை வழங்கும் நிலை யதார்த்தத்தில் இருக்காது. தற்போது தயாரிப்புக்களுக்கான அடிப்படை ஏதும் இல்லாத நிலையில் ஒரு சிறிய விலை முன்னுரிமை என்பது உள்நாட்டு தயாரிப்பில் எந்த விதமான முன்னேற்றத்தையும் ஏற்படுத்தாது. இது போன்ற முன்னுரிமைகள் நடைமுறையில் இருந்தாலும் அது எந்த விதமான பலனையும் இது வரை தரவில்லை. அது மட்டுமல்ல இதற்கு முந்தைய கொள்கைகளில் வரையறுக்கப்பட்ட உள்நாட்டு உற்பத்திகளை கொள்முதல் செய்வது என்பதனை அமுல்படுத்த எந்த முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை.

14.உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட கருவிகளின் பங்கை படிப்படியாக 80 சதவீதமாக உயர்த்துவது மற்றும் 2020க்குள் உள்நாட்டு பொருட்களின் மதிப்பை 65% கூட்டுவது என்பது வரைவு கொள்கை அறிக்கையின் நோக்கமாக சொல்லப்பட்டது என்பது மிக மிக அவசியம். ஆனால் அதை எவ்வாறு அடைவது என்பது தான் இன்றைய கேள்வி? இதை அடைவதற்கான வழிமுறைகள் ஏதும் இந்த வரைவு கொள்கை அறிக்கையில் தெளிவாக இல்லை.

15.தனியார் நிறுவனங்களின் இணைப்பு, கையகப்படுத்துவது மற்றும் வெளியேற்றும் கொள்கைகளை ஊக்கப்படுத்துவது என்பது இந்தக் கொள்கையின் மற்றொரு அம்சம். தொலை தொடர்பு துறை பல்வேறு துண்டுகளாக உள்ளது. எனவே அதனை ஒருங்கிணைப்பது அவசியம் என்று இந்த அறிக்கை வாதிடுகிறது.

16.தனி ஆதிக்கம் என்பதை தடுப்பதற்கும், போட்டியை வழங்குவதற்கும் எத்தனை நிறுவனங்கள் இருக்கலாம் என்பதல்ல பிரச்சனை. இணைப்பு மற்றும் கையகப்படுத்துதல் மூலம் தனி ஆதிக்க சக்தி ஏற்படும் என்ற பார்வையில் பார்க்கப்படவேண்டுமே ஒழிய, ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையில் நிறுவனங்களை குறைக்க வேண்டும் என்று பார்க்கக்கூடாது. இதன் மூலம் உரிம விதிகளை முழுமையாக அமுல்படுத்தாமல், 2-G உரிமங்களை பெற்றவர்கள் தங்கள் உரிமங்களை விற்பதற்கு வழிகாட்டுவதை போல தோற்றமளிக்கிறது. மேலும் ஆ.ராசாவின் 2-G ஊழல் சமயத்தில் உரிமங்கள் பெற்ற பல நபர்களின் சட்ட விரோத செயல்களையும், விதி மீறல்களையும் மூடி மறைப்பதற்கு ஏதுவாக இருப்பது போலவும் தெரிகிறது.

17.சமீபத்தில் இணைப்பு மற்றும் கையகப்படுத்துதலின் மாற்றப்பட்ட வழிகாட்டுதல்களுக்கான முன் மொழிதலை வெளியிட்டுள்ளது. தற்போது இணைப்பு என்பது அதிகபட்சம் 30% சந்தை பங்குகள் வரை அனுமதிக்கப்படுகிறது. புதிய முன்மொழிவு என்பது சந்தை பங்கை 35% வரை அனுமதியின்றி இணைத்துக்கொள்ளவும் 60% வரை அனுமதியுடனும்

இணைத்துக்கொள்ளலாம். தற்போது 20% சந்தைப்பங்கை கொண்டுள்ள ஏர்டெல் நிறுவனம், 15 சதவிகிதம் சந்தை பங்கை கொண்டுள்ள மற்றொரு நிறுவனத்தை எந்த விதமான அனுமதியும் இன்றி இணைத்துக்கொள்ளலாம். 30% என்பது தனி அதிக்கம் தானே வேறொன்றுமில்லை. ஆனால் அதனை 35%, மற்றும் 60% வரை என உயர்த்துவடு மிக மிக மோசமானது. அமெரிக்காவில் உள AT&T நிறுவனம் தற்போது 27% பங்கை சந்தையில் கொண்டுள்ளது. அது சந்தையில் 17% பங்கை கொண்டுள்ள T-mobile நிறுவனத்தை கையகப்படுத்த நினைத்தது. அதன் மூலம் சந்தையில் AT&T ந் பங்கு 44% ஆக உயர்ந்துவிடும். "தனது தினசரி வாழ்விற்கு மொபைல் கம்பியில்லா சேவையை நம்பியுள்ள் கோடிக்கணக்கான அமெரிக்க மக்களுக்கு அதிக விலை, மோசமான சேவை தரம், தேர்ந்தெடுக்க குறைந்த வாய்ப்பு, குறைந்த புதிய தரமான பொருட்கள்" என்ற நிலைக்கு கொண்டு சென்றுவிடும் என்ற அடிப்படையில் இந்த கையகப்படுத்துதலை வாஷிங்டன் மாவட்ட நீதிமன்றத்தில் அமெரிக்க நிதிதுறை இலாக்கா வழக்கு தொடுத்துள்ளது. இது போன்ற நிலையில் போதுமான போட்டியை உறுதி செய்ய முடியாது என்பதால் இந்தியவில் எவ்வாறு சந்தை மதிப்பின் 30%, 35% என்பதை ஏற்றுக்கொள்ள முடியும்?

18.ஸ்பெக்ட்ரத்தை திறமையாக பயன்படுத்துவது மற்றும் ஸ்பெக்ட்ரத்தை வியாபாரம் செய்வது மற்றும் பங்கீடு செய்வது தொடர்பாகவும் இந்த கொள்கை விவாதிக்கின்றது. ஸ்பெட்ரம் பயன்பாடு தொடர்பான எந்த ஒரு விவாதமும் கீழ் கண்டவற்றை பரிசீலிக்க வேண்டும்.

a)மற்ற பயன் பாட்டாளர்கள் மாற்றுக் கற்றை/மாற்று மீடியங்களுக்கு சென்ற பின்பும் பாதுகாப்பு இலாக்கவிடமிருந்து ஸ்பெக்ட்ரம் மாற்றித்தரப்படும் நடைமுறை முடிந்த பின்பு வியாபார நோக்கத்திற்காக எவ்வளவு ஸ்பெக்ட்ரம் கிடைக்கும்?
b)ஸ்பெக்ட்ரத்தை மேலும் திறம்பட பயன் படுத்த உள்ள தொழில் நுட்பங்கள்.
c)தற்போதுள்ள தொழில் நுட்பங்களின் அடிப்படையில் ஸ்பெக்ட்ரம் பயன்பாட்டிற்கான அளவீடுகள்.
d)Cognitive Radio தொழில் நுட்பம் உள்ளிட்ட தொழில் சட்டங்களை பயன்படுத்தி எந்த ஒரு நிறுவனத்திற்கும் சொந்தமாக தராமல், இடம் மற்றும் நேரம் ஆகியவற்றின் தேவை அடிப்படையில் கொடுக்கும் தொழில் நுட்ப சாத்தியகூறு. இது போன்ற ஆய்வுகள் இல்லாமல் ஸ்பெட்ரத்தில் வியாபாரம் மற்றும் பங்கீடு தொடர்பாக ஒரு கொள்கையை பற்றி பேசுவது சிறுபிள்ளை தனமானது.

19.அகலகற்றை சேவைகளை தர முக்கியமான வளமான கேபிள் TV வலைபின்னலை அதிகப்படியாக பயன் படுத்தவேண்டும் என்ற முடிவை எடுக்கும் முன்னர் Dish TV வலைபின்னல்கள் உள்ளிட்டவைகளை பயன் படுத்தினால் சிறந்த தேர்வாக இருக்க முடியுமா என்று பரிசீலிக்க வேண்டும். எந்த முறையை பயன்படுத்தினாலும் போதுமான போட்டி இருக்கவேண்டும். தனி ஆதிக்கம் என்பதோ, ஒரு சிறு கும்பல் ஆதிக்கம் செய்யப்படுவதோ இருக்கக்கூடாது.

20.மேற்குறிப்பிட்ட காரணங்களால், தொலை தொடர்புத்துறை சேவையிலும், உபகரண உற்பத்தியிலும், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நடவடிக்கையிலும் பொதுத்துறை நிறுவனங்கள் பிரதான பங்கை வகிக்கும் வகையில் தொலை தொடர்பு கொள்கையை மாற்றி அமைப்பது தேவையாகியுள்ளது. 1990 ம் ஆண்டுக்கு முன்னர் தொலை தொடர்பு துறையில் பல்வேறு பகுதிகள் மிகவும் பின் தங்கி இருந்த மக்கள் சீனம், இந்தியாவை ஒப்பிடும்போது தற்போது

அனைத்து பிரிவுகளிலும் (ஆராய்ச்சி, மேம்பாடு, உற்பத்தி, சேவை) பிரமாண்டமான வளர்ச்சியை சாதித்து உள்ளது. அதற்கு மூல காரணம் பொதுத் துறை நிறுவனங்களின் ஆதிக்கமே.

21.எனவே உத்தேசிக்கப்பட்டுள்ள 2011 தேசிய தொலை தொடர்பு கொள்கை மறு வடிவமைக்கப்பட்டு, கீழ்கண்ட முக்கிய அம்சங்கள் உட்பட்டதாக இருக்க வேண்டும் என்று முன் மொழிகின்றோம்.

**a)தொலை தொடர்பு சேவையின் ஆராய்ச்சி, மேம்பாடு, உற்பத்தி மற்றும் சேவை பகுதிகளில் பொதுத்துறை நிறுவனங்களுக்கு பிரதான பங்கை அளிக்க வேண்டும்.**

**b)தரைவழி வலைபின்னல்களால் ஏற்படும் நஷ்டத்தை ஈடுகட்டும் வகையில் BSNL மற்றும் MTNL நிறுவனங்களுக்கு ADC கட்டணம் வழங்க வேண்டும். தொலைபேசி இணைப்புகள் வழங்கும் உண்மையான மதிப்பை, கீழ்மட்ட சந்தாதாரர்களின் பயன்பாட்டின் மூலம் போதுமான வருமானம் கிடைக்காத காரணத்தால் தான் Access Deficit ஏற்படுகிறது என்பதை கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். தனியார் நிறுவனங்கள் தேவைக்கேற்ப தொலைபேசிகளை வழங்காமல் உயர் மட்ட சந்தாதாரர்கள் மற்றும் வர்தக பகுதிகளில் மட்டுமே தங்களது சேவைகளை சுருக்கிக் கொள்கின்றனர்.**

**c)தனியார் நிறுவனங்களை, ஒரு சில விற்பனையாளர்களிடமிருந்து கருவிகள் பெறுவதற்கு அனுமதி கொடுத்துவிட்டு, பொதுத்துறை நிறுவனங்களான BSNL மற்றும் MTNL நிறுவனங்கள் அதே விற்பனையாளரிடம் இருந்து கருவிகள் வாங்குவதற்கு தடை செய்யகூடிய பாகுபாடு இருக்ககூடாது. பொதுத்துறை மற்றும் தனியார் நிறுவனங்கள் கொள்முதல் செய்யும் கொள்கை என்பது ஒரே சீராக இருக்க வேண்டும்.**

**d)கிராமப்புற தரை வழி சேவைக்கு USO நிதியிலிருந்து போதுமான நஷ்ட ஈடு வழங்க வேண்டும். USO வின் வழிகாட்டுதல் படி கிராமப்புறம் மற்றும் கடினமான பகுதிகளுக்கு செல்லுலார் மற்றும் தரை வழி இணைப்புக்கான USO திட்டத்திலிருந்து வழங்கப்படும் நிதி தனித்தனியாக ஒதுக்க வேண்டும்.**

**e)மற்ற நிறுவனங்களை விட BSNL நிறுவனம் ஏற்கனவே மிகப்பெரிய அளவில் கண்ணாடி இழை கேபிள்கள் (OFC) வலைபின்னல்களை கொண்டுள்ளதால், தேசிய கண்ணாடி இழை கேபிள்கள் வலைபின்னலை நிர்மானித்து, சொந்தமாக்கி, பராமரிக்கும் பணியை BSNL க்கே தரவேண்டும். ஒரே நிறுவனம் இந்த வலைபின்னலை நிர்மானிப்பது என்பது சிறந்த சிக்கன நடவடிக்கையாகும். இந்த வலைபின்னலுக்கான நிதியை அரசாங்கம் மற்றும் USO நிதி மூலம் தரவேண்டும். இது முதுகெலும்பு போன்ற முக்கியமான வலைபின்னலாக இருப்பதால் செலவினங்களின் இரட்டிப்பை தவிர்க்கவும், தேச பாதுகாப்பை கருதியும் ஒரே நிறுவனத்திற்கு சொந்தமாக்கப்பட வேண்டும். இது போன்ற தனி ஆதிக்கம் என்பது அரசாங்கத்திடமே இருக்க வேண்டும். எனவே இது BSNL க்கெ சொந்தமாக்கப்பட வேண்டும்.**

**f)வலை பின்னல்களை உருவாக்குவது, சேவைகளை தருவது உள்ளிட்ட இரண்டையும் அனுமதிக்குபடியான ஒருங்கிணைக்கப்பட்ட உரிமங்களே இருக்க வேண்டும். தனித்தனியாக உரிமங்கள் தருவது என்ற திட்டத்தை கைவிட**

வேண்டும்.

g)வரையறுக்கப்பட்ட கடமைகளை செய்யாமல், இணைப்பு, கையகப்படுத்துதல் மற்றும் வெளியேற்றம் ஆகியவற்றை அனுமதிக்கக் கூடாது. இல்லையென்றால் அது உரிமங்களில் வர்த்தகம் செய்வதே ஆகும். மேலும் இணைப்பு, கையகப்படுத்துதல் மற்றும் வெளியேற்றம் என்பது தனி ஆதிக்கத்திற்கோ, ஒரு சிறு கும்பலின் ஆதிக்கத்திற்கோ கொண்டு சென்று விடக்கூடாது. போதுமான நியாயமான போட்டி இருக்க வேண்டும்.

h)பொதுத் துறை நிறுவனங்களுக்கு கட்டணம் இல்லாமலும், தனியார் நிறுவனங்களுக்கு சந்தையில் உள்ள மதிப்பின் அடிப்படையிலும் ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீடு செய்ய வேண்டும். சமூக கடமைகளை பொதுத்துறை நிறுவனங்கள் தான் மேற்கொள்கிறதே தவிர மற்ற தனியார் நிறுவனங்கள் அல்ல. எனவே பொதுத் துறை நிறுவனங்களுக்கு இலவசமாக ஸ்பெக்ட்ரம் வழங்குவது அவசியம். தற்போது கிராமப்புறத்தில் உள்ள 90 சதவிகித தரைவழி தொலைபேசிகளை BSNL நிறுவனம் தான் கொடுத்துள்ளது. மற்ற அனைத்து தனியார் நிறுவனங்கள் எல்லாம் சேர்ந்து வெறும் 10 சதவிகிதம் தான் கொடுத்துள்ளது.

i)பாரா19ல் சொல்லப்பட்ட காரணங்களால், இந்த கட்டத்தில் ஸ்பெக்ட்ரத்தில் வர்த்தகமோ, பங்கீடு செய்வதோ அனுமதிக்கக் கூடாது.

j)2G ஸ்பெக்ட்ரம் ஊழலில் ஈடுபட்ட அனைத்து நிறுவனங்களின் உரிமைகளும் ரத்து செய்வதோடு அவர்களுக்கு வழங்கப்பட்ட அனைத்து ஸ்பெக்ட்ரமும் திரும்ப எடுத்துக் கொள்ள வேண்டும்.

k)அரசின் கட்டுப்பாடு இல்லாமல் போய் விடும் என்பதாலும், இடைத்தரகர்களால் வாடிக்கையாளர்களுக்கு கூடுதல் சுமை ஏற்படும் என்பதாலும் சேவையை மறு விற்பனை செய்வதை அனுமதிக்கக் கூடாது.

l)2020ல் உள்நாட்டு மதிப்பை 65%ஆக கூட்டுவதுடன், உள்நாட்டில் உற்பத்தி செய்யும் கருவிகளின் பங்கை படிப்படியாக 80%ஆக உயர்த்துவது என்ற நோக்கத்தை அடைய:

* C-DOT மற்றும் பொதுத் துறை நிறுவனங்களுக்கு நிதி மற்றும் முதலீட்டை வழங்குவதன் மூலம் உள்நாட்டு R&D(ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு)ஐயும், IPRs(Intellectual Property Rights)ஐயும் ஊக்கப்படுத்த வேண்டும்.

* தொலைத்தொடர்பு கருவிகள் உற்பத்தியில் போதுமான அனுபவம் உள்ள BSNLல் உள்ள தொலைதொடர்பு தொழிற்சாலைகள் (Telecom Factories), ITI மற்றும் HCL உள்ளிட்ட பொதுத்துறை நிறுவனங்களுக்கு, வெளி நாட்டு கருவி தயாரிப்பாளர்கள் தொழில் நுட்பத்தை மாற்றித் தர வலியுறுத்தும் படி தேவையான நிபந்தனைகள் உருவாக்கப்பட வேண்டும். தனது உள் நாட்டு சந்தையை பயன்படுத்தும் அனைத்து தொலை தொடர்பு நிறுவனங்களையும் சீன அரசு, தனது நாட்டு நிறுவனங்களுக்கு தொழில் நுட்பத்தை மாற்றித்தர வைத்தது. இதற்கு மாறாக, இந்த காலகட்டத்தில் தொலைத்தொடர்பு சேவையில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்பட்டுள்ள சூழ்நிலையில் இந்தியா, தனது உள்நாட்டு உற்பத்தி திறனை முழுமையாக இழந்து விட்டது.

* உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிக்கவும், இறக்குமதியை உற்சாகம் இழக்கச் செய்யவும் வகைசெய்யும் படியாக கஸ்டம்ஸ் வரி, dutyக்கள் மற்றும் வரிகளை மாற்றியமைக்க வேண்டும். தற்போதுள்ள முறை இதற்கு எதிராக உள்ளது. கச்சா பொருட்கள், முழுமையாக முடிக்கப்படாத பொருட்களுக்கு மிக அதிகமான Dutyயும், முழுமையாக முடிக்கப்பட்ட பொருட்களுக்கு குறைந்த dutyயும் உள்ளது. தற்போதைய சூழ்நிலையில் உள்நாட்டு தயாரிப்பை விட இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களே இந்தியாவில் அதிகமாக இருப்பது ஆச்சரியப்பட தக்கதல்ல.

*உள்நாட்டு பொருட்களுக்கு முன்னுரிமை வழங்குவதற்கு, அரசு WTOக்கு கொடுத்துள்ள உறுதிமொழியால் ஏற்படும் தடைகளை நீக்குவதற்கான வழிமுறைகள் உருவாக்கப்பட வேண்டும்.

22.தொலைத் தொடர்பு துறையில் தேச பாதுகாப்பை உறுதி செய்வதற்கான, தனியார் நிறுவனங்கள் தனது வலைபின்னல்களை பராமரிப்பதற்கும், சேவைகளை தருவதற்கும் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு கொடுத்துள்ள Outsourcingஐ நிறுத்த கட்டாயப்படுத்த வேண்டும். கருவிகள் வழங்கும் வெளிநாட்டு நிறுவனங்களை SOURCE CODEஐ தர கட்டாயப்படுத்த வேண்டும்.

23.தயாரிப்பு துறையிலோ அல்லது சேவைத் துறையிலோ உள்ள தனியார் நிறுவனங்கள் அனைத்தும் SC/ST/OBCக்களுக்கான இட ஒதுக்கீட்டையும் தொழிலாளர் நல சட்டங்களையும் அமுலாக்க வேண்டும்.

24.ஒட்டு மொத்த தொலைத் தொடர்பு துறைக்குமான தேசிய ஊதியக் கொள்கை இருக்க வேண்டும். தனியார் துறையில் உள்ளவர்களின் ஊதியம் என்பது பொதுத் துறை நிறுவன ஊழியர்களின் ஊதியத்தின் அடிப்படையில் இருக்க வேண்டும்.

-x-x-x-x-x-x-x-x-x-x-x-